2013 ஏப்ரல் 8]

மேற்கொள்ளப்படும். இதைத் தவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதர பகுதிகளுக்காக வைத்திருக்கின்ற கோரிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

166—

ஊரகக் குடிநீர்த் திட்டம்

***19861—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியம், கம்மாலப்பட்டி மற்றும் 22 கிராமங்களுக்கான குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்தியவிடையைத் அளிக்கிறேன்..

வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியம், கம்மாலப்பட்டி மற்றும் 22 கிராமங்களில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் ஆழியாறு ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கம்மாலப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்போது செயல்பட்டு வருகிறது. இத்திட்டம், அதனுடைய வடிவமைப்பு காலம் முடிந்துவிட்டபடியால், பல்வேறு கட்டமைப்புகளிலுள்ள பழுதுகள் தற்பொழுது சீரமைக்கப்பட வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பழுதுநீக்கம் மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 120 இலட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கம்மாலப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த அமைக்கப்பட்ட திட்டக் குழு,

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 31–3–2013 வரை மின் கட்டண நிலுவைத் தொகையாக 1 கோடியே 29 இலட்சத்து 57 ஆயிரத்து 83 ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, கம்மாலப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொய்வின்றி செயல்படுத்தத் தேவையான நிதி வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லும்போது அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார்கள்; நன்றி. வால்பாறை சட்டப் பேரவைத் தொகுதி, ஆனைமலை ஒன்றியத்திற்குட்பட்டிருக்கக்கூடிய, கம்மாலப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கோட்டூர் பேரூராட்சி, கம்மாலப்பட்டி, ஜல்லிப்பட்டி, கரியஞ்செட்டிப்பாளையம், பிலிசின்னம்பாளையம் ஆகியவை ஏற்கெனவே இந்தத் திட்டத்தில் இருந்தன. புதிதாக அர்த்தநாரிப்பாளையம் ஊராட்சியும் இணைக்கப்பட்டிருக்கின்றது. அதோடு இணைத்து உடுமலைப்பேட்டை தொகுதியில் சேர்ந்திருக்கக்கூடிய சமத்தூர் பேரூராட்சி, எஸ். நல்லூர் ஊராட்சி, தொண்டாமுத்தூர் ஊராட்சி, புளியம்பட்டி ஊராட்சி ஆகிய ஊராட்சிகள் எல்லாம் புதிதாக இணைக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஜனத்தொகை கொண்டிருக்கக்கூடிய இந்தப் பகுதியில், இந்தத் திட்டத்தின்கீழ் இப்பொழுது சாலையை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொண்ட நேரத்தில், அந்தக் குழாய்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு, போதிய அளவிற்குத் தண்ணீர் வருவதில்லை. ஏற்கெனவே கடந்த ஆட்சியில், மின்சாரத் துறைக்குக் கட்ட வேண்டிய பாக்கிப் பணம் ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய் பாக்கி இருக்கின்ற காரணத்தினாலும் இப்பொழுது அந்தக் கிராமத்தில் வாழக்கூடிய மக்கள் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டின் காரணமாக நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உடனடியாக பழுதுநீக்கம் மற்றும் புனரமைப்பு செய்து,

2013 ஏப்ரல் 8]

அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், மற்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் போன்று அல்லாமல், இராஜீவ் காந்தி கூட்டுக் குடிநீர்த் திட்டக் குழுமத்தின் பரிந்துரையின்பேரில் அங்கு இருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகளிடையே ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவின் வாயிலாக இந்தக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையிலே வீடு ஒன்றிற்கு இணைப்புக்காக 50 ரூபாயும், கிராமப்புறங்களில் குடிதண்ணீர் பொது விநியோகம் செய்கின்ற நேரத்தில் ஒரு கிலோ லிட்டர் தண்ணீருக்கு 3 ரூபாயும் வசூல் செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே அந்தக் குழுமம் மேலும் கூடுதலாக நிர்ணயம் செய்வதற்கு அங்குள்ள மக்கள் விரும்பவில்லை. அதன் காரணத்தினால் இந்தக் கடன் ஏற்பட்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்லாமல், இது 1982 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம். கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, குழாய்கள் பழுதுபட்டு இருக்கின்றன. அந்தக் குழாய்களைச் சீர் செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை கடிதத்தை துறைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

[2013 ஏப்ரல் 8

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் கட்டண பாக்கி என்பது கிட்டத்தட்ட ஒரு கோடியே, 62 இலட்சம் ரூபாய் சம்பந்தப்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகளினால் கட்டப்பட வேண்டிய தொகை. இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தப் பணத்தைக் கட்டுவதற்கான வாய்ப்பு இல்லாத நிலை இருக்கக்கூடிய நேரத்தில் மின்சாரத் துறையே அதை ஏற்றுக்கொண்டு, இந்தத் திட்டத்தில், பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய குழாய்களை உடனடியாக சரிசெய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பொன்னாளம்மன் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் காளியாபுரம் ஊராட்சி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, உடையகுளம் பேரூராட்சி, மாரப்பன்கவுண்டன்புதூர் பேரூராட்சி, பெரியபுதூர் பேரூராட்சி, திவான்சாபுதூர் ஊராட்சி, ஆத்தூர் ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கென்று உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தத் திட்டத்திலும் 15 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வருகிறது. இதன் காரணமாக திவான்சாபுதூர், பெரியபுதூர், மாரப்பன்கவுண்டன்புதூர் பகுதிகளில் வாழக்கூடிய மக்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை தான் தண்ணீர் கிடைக்கிறது. எனவே, சீராக தண்ணீர் விநியோகம் செய்வதற்கான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்கட்டண பாக்கியை மின்சாரத் துறையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார். அப்படி மின்சாரத் துறை ஏற்றுக்கொண்டால் மகிழ்ச்சி. அவ்வாறு இல்லை என்றாலும்கூட, மக்களுடைய வாழ்வாதாரமான குடிதண்ணீரைக் குறைவின்றி கொடுக்க வேண்டும் என்பதுதான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய முதல் இலக்கு. அதன் அடிப்படையிலே நிருவாகமே மின்சாரத் துறையினுடைய கடனைச் செலுத்துவதற்குரிய நடவடிக்கையையும் எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு ஊராட்சிகளில் 124 குடியிருப்புகள் இருக்கின்றன. அந்த 124 குடியிருப்புகளில் 121 குடியிருப்புகளுக்கு முறையாக குடிதண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது. 3 குடியிருப்புகளுக்கு நிறைவாக குடிதண்ணீர் வழங்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. அதற்கேற்றவாறு இப்பொழுது செயல் திட்டங்களைத் தீட்டி குடிதண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் சில கிராமங்கள் கம்பாளப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே பயன்பெற்று வருகின்றன. இது மாண்புமிகு முன்னாள் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலேயே முதன்முறையாக பரிட்சார்த்தமாகத் தொடங்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம். அப்போதிருந்த சூழ்நிலைக்குத் தகுந்தவாறு நெடுஞ்சாலையின் ஓரத்திலே பதிக்கப்பட்டு இருந்த குழாய்கள் எல்லாம் நெடுஞ்சாலையினுடைய மராமத்துப் பணிகள் காரணமாக மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. முற்றிலுமே அந்தக் குடிநீர்த் திட்டத்தை பல ஊராட்சிகள், பேரூராட்சிகள் எல்லாம் சேர்ந்து நிருவகிக்கும்பொழுது யார், யார் எந்தெந்த மாதத்திலே மின் கட்டணம் கட்டுவது போன்ற பல குழப்பங்கள் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே, குடிநீர் வடிகால் வாரியமே அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினுடைய நிருவாகத்தை எடுத்துக்கொண்டு பல கிராமங்கள் பயன்பெறக்கூடிய அந்தக் குடிநீர்த் திட்டத்தைச் சிறப்பாக மீண்டும் ஒரு முறை புனரமைத்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே செய்து கொடுக்க வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதைப்போல, இது 1982–ல் உருவாக்கப்பட்ட திட்டம். அப்படி இருக்கின்ற காரணத்தினால்தான் குழாய்கள் பழுதுபட்டு இருக்கின்றன. குடிநீர் வடிகால் வாரியமே அந்த பழுதுபார்ப்புப் பணிகளைச் செய்வதற்காக 120 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கூறியிருக்கிறது. அந்த நிதி ஆதாரத்தை உருவாக்கி, பழுதுபட்ட குழாய்களை மாற்றியமைத்து சீரான குடிதண்ணீர் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

முற்பகல் 10–15

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதிக்கு மேட்டுப்பாளையம் பகுதியிலிருந்தும், பவானியிலிருந்தும் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. கடந்த காலங்களில் ஒருமுறை மேட்டுப்பாளையம் தண்ணீரும், மறுமுறை பவானி தண்ணீரும் விநியோகித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது, இரண்டையும் கலந்துவிடுகின்ற காரணத்தினால் அங்கு பாதிப்பு ஏற்படுகிறது. கடந்த காலங்களைப்போல ஒருமுறை மேட்டுப்பாளையம் தண்ணீரும், மறுமுறை பவானித் தண்ணீரும் விடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ளபடி அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுபோன்று தவறுகள் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அதை மாற்றியமைத்து முறையாக மக்களுக்குத் தேவைப்படுகின்ற அளவிலே அங்கு குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

167—

அங்கன்வாடி மையம்

***13287—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஈஸ்வரன்கோவில் ஊராட்சி, சுளிக்கிப்பட்டியில், அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, ஈஸ்வரன்கோவில் ஊராட்சியில் சுளிக்கிப்பட்டி கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமப் பயனாளிகள் அனைவரும் ஒரு கிலோ மீட்டர் அருகில் உள்ள சீத்தப்பட்டி மையத்தின்மூலம் பயனடைந்து வருகிறார்கள். சுளிக்கிப்பட்டி கிராமத்தில் பயனாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதாலும், இம்மையப் பயனாளிகளுக்குரிய பயன்கள் அனைத்தும் சீத்தப்பட்டி மையத்திலிருந்து வழங்கப்பட்டு வருவதாலும் இக்கிராமத்திற்கென தனியாக புதிய மையம் அமைக்க தேவை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே குழந்தையைப் பெற்றெடுப்பது தாயாக இருந்தாலும், பெற்ற குழந்தையைப் பேணிப் பராமரிப்பது முதற்கொண்டு, அங்கன்வாடி மையத்திலே தொடங்கி, உயர் கல்வி மற்றும் திருமண வயது வரையிலே அந்தக்